செ.வெ.எண் :02/செப்டம்பர் நாள்: 03.09.2019

**இராமநாதபுரம் மாவட்டம்**

**மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சார்பாக தனியார் துறை சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் 06.09.2019 அன்று நடைபெறவுள்ளது**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

தமிழக அரசின் சார்பில் ஒவ்வொரு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்திலும் வேலைநாடும் இளைஞர்கள் பயன்பெறும் பொருட்டு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை அன்று நடத்தப்பட்டு வருகிறது. இம்முகாமில் தனியார்துறை முன்னணி நிறுவனங்கள் கலந்துகொண்டு வேலைநாடும் இளைஞர்களின் கல்வித்தகுதிகேற்ப ஆட்களை தேர்வு செய்ய உள்ளனர்.

இம்முகாமில் 10-ம் வகுப்பு முதல் முதுகலை பட்டப்படிப்பு வரை முடித்த வேலைநாடுநர்கள், ஐடிஐ மற்றும் டிப்ளமோ படித்த வேலைநாடுநர்கள் கலந்துகொண்டு தங்களது தகுதிக்கேற்ப தனியார்துறை நிறுவனங்களில் பணிநியமனம் பெற்றுக்கொள்ளலாம். இம்முகாமில் கலந்துகொள்ள விருப்பமுள்ள வேலைநாடுநர்கள் தங்களின் சுய விபரங்களடங்கிய விண்ணப்பம், அனைத்து அசல் கல்விச்சான்றுகள், ஆதார் அட்டை, குடும்ப அடையாள அட்டை மற்றும் புகைப்படத்துடன் 06.09.2019 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்திற்கு நேரில் வந்து கலந்துகொண்டு இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளலாம்.

இம்முகாம் மூலம் தனியார் நிறுவனங்களின் வேலைவாய்ப்பு பெறுவதினால் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு எக்காரணத்தை கொண்டும் ரத்து செய்யப்படமாட்டாது எனவும் அரசுத் துறைகளில் கோரப்படும் பணியிடங்களுக்கு அரசு விதிமுறைகளின்படி பரிந்துரை செய்ய பரிசீலிக்கப்படும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**